# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2338/58 - 2023 ජුනි මස 30 වැනි සිකුරාදා - 2023.06.30

2338/58 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், திருத்தப்பட்டவாறான 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, இக்கட்டளை மூலம் 2023, யூலை 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், இதனகத்தேயுள்ள அட்டவணையின் I, II மற்றும் III ஆம் நிரல்களில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தொடர்புடைய பொருட்களுக்குப் பொருந்தக்கூடிய IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உற்பத்தித் தீர்வை விகிதம், இந்தச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2022, திசெம்பர் 31 ஆந் திகதிய 2312/ 68 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் அட்டவணையிலுள்ள தொடர்புடைய பொருட்களுக்குப் பொருந்தக்கூடிய IV ஆம் நிரலில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உற்பத்தித் தீர்வை விகிதத்திற்காகப் பிரதியீடு செய்யப்படல் வேண்டுமெனப் பிரகடனப்படுத்துகின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக்
கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, யூன் 30.


1A - PG 6385 — 456 (2023/07)


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## I ஆம் அட்டவணை

| *இ.மு. தலைப்பு* I | *இ.மு. குறியீடு* II | *விபரம்* III | *உற்பத்தித் தீர்வை* IV |
|---|---|---|---|
| *24.02* | | **புகையிலையிலான அல்லது புகையிலைக்குப் பதிலானவையிலான சுருட்டுக்கள், செருட்கள், சிகாரில்லோக்கள் மற்றும் சிகரெட்டுகள்.** | |
| | *2402.20* | புகையிலை கொண்ட சிகரெட்டுகள் : | |
| | *2402.20.20* | சிகரெட்டுகள், ஒவ்வொன்றும் 60 மி.மீற்றருக்குக் குறைவான நீளத்தைக் கொண்டவை. | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 16, 030/- |
| | *2402.20.30* | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 60 மி. மீற்றருக்குக் கூடிய ஆனால் 67 மி. மீற்றருக்குக் கூடாத நீளத்தைக் கொண்டவை. | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 41,540/- |
| | *2402.20.40* | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 67 மி. மீற்றருக்குக் கூடிய ஆனால் 72 மி. மீற்றருக்குக் கூடாத நீளத்தைக் கொண்டவை. | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 59,180/- |
| | *2402.20.50* | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 72 மி. மீற்றருக்குக் கூடிய ஆனால் 84 மி. மீற்றருக்குக் கூடாத நீளத்தைக் கொண்டவை. | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 67,100/- |
| | *2402.20.60* | சிகரெட்டுக்கள், ஒவ்வொன்றும் 84 மி.மீற்றருக்குக் கூடிய நீளத்தைக் கொண்டவை. | 1,000 சிகரெட்டுகளுக்கு ரூபா 74,590/- |

EOG *07-0091*